சிறப்புப் பிரதி. திரு. N. வித்தியாதரன் அவர்கள்.
உதயன் - சுடரொளி

# தமிழ் ஓசை



பக்கங்கள்- 24 இதழ் -01 விலை ரூபா. 20.00

செல். பேசி எண் 077 -9127527 ஆ-ன் தம்பியண்ணா

## மக்கள் கணிப்புக்கள்

இலங்கை - அடுத்த சனாதிபதி – ரணில் விக்கிரமசிங்கவே!


இந்தியா- தமிழகத்தில் அடுத்த முதல்வர் கலைஞர் கருணா நிதிதான்.

இராக் - உயிர்ப்பலிகளுக்கு முழுப்பொறுப்பும் ஜோர்ஜ் புஷ் தான்.

இலண்டன் - குண்டுத் தாக்குதல்களுக்கு காரணம் ரொனிப்பிளேயரே!

இன்னும் பல அதிரடி அலசல்கள்!

அனைத்தும் மக்கள் கருத்துக்கள்!!



**இந்த இதழுடன் இரண்டு பூச்சி முட்டைகள்**
**இலவசமாகக் கிடைக்கும். (ஆ – ன்)**

தமிழ் ஓசை மக்களின் மனதறிந்த பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மனம் பேசுகிறது

- தம்பியண்ணா-

**ஆக்கியோன்,**
**தமிழ் ஓசை,**
**2005.08.28.**

**வாசகர்,**
**தமிழ் ஓசை.**

அன்புடையீர்,

வணக்கம். நலம் தானே! நல்லது ஈழத்திலே ஆலயங்களில் திருவிழாக்கோலம் ஆரம்பமாகி எங்கும் பக்தி மணம் கமழ்கின்றது. தமிழகத்தில் ஈழத்தமிழர் மீதான ஆதரவுப் போக்கும், தமிழ் எழுச்சிக்கோலமும். மீண்டும் துளிர்விட்டு வெற்றி நடைபோடுகின்றது. மற்றும் சர்வதேச ரீதியில் விஞ்ஞான, விண்வெளிச்சாதனைகள் உட்பட கல்வி, கலை, விளையாட்டுத்துறைகளில் முன்னேற்றங்கள் ஆகிய நல்ல செய்திகளுடன் உங்களை "தமிழ் ஓசை" என்ற இதழ் மூலம் சந்திப்பதையிட்டுப் பேருவகையடைகின்றேன்.

இதேவேளை, நம் நாட்டிலும், அயல் நாடுகளிலும் ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு மிகப் பேரழிவுகளையும் - ஈழத்தமிழ் மக்களிடையே போரழிவுத் தாக்கங்கள் மறையு முன்னே இயற்கைப் பேரழிவும் ஆடியதாண்டவம் பெரும் பாதிப்பை உண்டு பண்ணியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை ஒருபுறமிருக்க பொருட்கள் விலை உயர்வு, பொருளாதார நிலை என்பவற்றாலும் தமிழ் பேசும் மக்கள் சவால்களை எதிர்நோக்குகின்றனர்.

மறுபுறம் நம்ம நாட்டிலும் சரி சர்வதேசத்திலும் சரி அமைதியற்ற சூழ்நிலையே தற்போது நிலவி வருகின்றதை அவதானிக்க முடிகின்றது. எங்கும் குண்டு வெடிப்புக்களும், விபத்துக்களுமாக வன்முறை தாண்டவமாடுகின்றன. இவற்றிற்கு இனவாத,மதவாத, வல்லாதிக்க சக்திகளின் அடக்குமுறை மற்றும் ஆக்கிரமிப்புப் போக்கே பிரதான காரணம் எனலாம். கூடவே உலகளாவிய ரீதியில் பெருகி வரும் சனத்தொகைப் பெருக்கமும் கவலை தரும் விடயமே!

இருப்பினும் இவையெல்லாம் கதிரவனைக் கண்ட பனித்துளி போல விரைவில் நீங்கிவிடும் என்று நம்புவோம். நமக்கும் ஒரு விடியல் விரைவில் ஏற்படும் என்று நம்புவதோடு, இறைவனையும் வேண்டி விடியலுக்கான பயணத்தில் வீறு நடைபோடுவோம்.

இருக்க, இன்றைய சூழலில் வானொலி தொலைக்காட்சி சினிமாவையும் தாண்டி கணினி, இன்டர் நெட், ஈமெயில் போன்ற பொழுது போக்குச் அம்சங்கள் பெருகிவிட்ட நிலையில் - பத்திரிகை சஞ்சிகைகளுக்கான வாசகர்கள் குறைந்து வருவதாக நோக்கர்கள் தெரிவித்துள்ள போதும், உங்களை நம்பி மயில்கள் ஆடுகின்றன என்று நாமும் 'தமிழ் ஓசை' என்ற தோகையை விரித்து ஆட களத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதித்துள்ளோம். இதன் வெற்றியும் தோல்வியும் உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. தமிழ் மக்கள் - அதுவும் யாழ் மக்கள் இதழியல் - ஊடகத்துறைகளுக்கு அளித்துவரும் ஆதரவு பிரமிக்கத்தக்கது. அந்த வகையில் 'தமிழ் ஓசை' இதழும் உங்கள் ஆதரவுடன் வெற்றி நடை போடும் என்பதில் ஐயம் ஏது?

அன்பர்களே... இந்த இதழில் இலங்கை, இந்தியா, இலண்டன், இராக் குறித்த விடயங்கள் அலசப்பட்டுள்ளன. இவை ஒரு சில மக்களின் மனப் பதிவுகளே! எதிர்வரும் இதழ்களில் உங்கள் மனப்பதிவுகளும் இடம்பெறக் காத்திருக்கின்றன. உங்கள் கருத்துக்கள் காகிதத்தை நிரப்புவன மட்டுமல்ல, நம்நாட்டிலும், ஏன் சர்வதேசத்திலும் மாற்றங்களை உண்டு பண்ணவல்லன.

அன்புள்ளங்களே..... உங்களுக்காக இலங்கையிலேயே முதன்முதலாக இதழுடன் இலவச பொருட்கள் வழங்கும் ஒரே இதழ் 'தமிழ் ஓசை' இதழே அவ்வகையில் இவ்விதழுடன் இரண்டு பூச்சி முட்டைகளை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். அடுத்த இதழ்களிலும் இலவசங்கள் தொடரும். ஓ.கே. மீண்டும் மறுமடலில் உங்களை மகிழ்ச்சியான தகவல்களுடன் சந்திக்கக் காத்திருக்கிறேன்.

**Bay**

நன்றி
வணக்கம்

இப்படிக்கு,
அன்புடன் உங்கள்
தம்பியண்ணா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீலங்காவின் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டப் போவது யார்? என்று கேட்ட போது கிடைத்தவை!

1, ஐ.தே.கவின். ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கே வாய்ப்பு அதிகம். இருபது வருடத்திற்கும் மேற்பட்ட கொடிய போரை முடிவிற்குக் கொண்டு வந்ததில் அவருக்கும் பெரும் பங்கு உண்டு. இதனால் தமிழ் மக்கள் ஒன்றும் பெரிய நன்மைகளைப் பெற்றுக் கொள்ளவில்லை எனினும் சற்றுப் பெரு மூச்சுவிட முடிந்தது. அதே போல சிங்கள மக்களும் நிம்மதியான வாழ்வு பெற முடிந்தது. இதனால் ரணில் அவர்களே கண்டிப்பாக ஜனாதிபதியாவார்.

மானிப்பாய் க. குணராசா.

2. ரணில் தான். புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் அவரது உடனடி நடவடிக்கைகள் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடம் பெரிதும் வரவேற்பைப் பெற்றன. இது கண்டு பொறுக்காத சந்திரிக்கா குட்டையைக் குழப்பி இன்று எல்லாவற்றையும் கெடுத்து விட்டார். இதற்கு மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள். அவர் வீட்டுக்குப் போகும் போது ஸ்ரீ.சு.கட்சியையும் அழைத்துச் செல்லும் நிலை ஏற்படும். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கூட இனவாத சக்திகளுடன் ஏற்பட்ட கூட்டினாலேயே வெற்றியை - அதுவும் விளிம்பில் பெற்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

சுன்னாகம். த. சிவபாக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3). ரணில் அவர்கள் தான் வெற்றியீட்டுவார். சந்திரிக்கா ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தார். பின் பொதுக்கட்டமைப்பு கொடுக்கிறேன் என்று தமிழர்களையும் ஏமாற்றி ஜே.வி.பி யையும் பகைத்துக் கொண்டு விட்டார். அது போக மக்கள் மீதான பொருட்கள் விலை உயர்வுச் சுமை கூடவே மகிந்தராஜபக்ஷவின் மக்கள் செல்வாக்குக் குறித்த சந்தேகம், தனது தம்பியாருக்கு ஜனாதிபதி வேட்பாளர் வாய்ப்பு கிட்டாததால் அவருக்கு உள்ள வெறுப்பு என்பன நிச்சயம் சந்திரிக்கா அவர்களைத் தோல்விக்குத் தள்ளும்.

யாழ்ப்பாணம். பொ. செல்வகுமார்.

4). சந்திரிக்கா அவர்கள் மீண்டும் வேட்பாளராக நின்றால் ஒரு வேளை வெற்றி வாய்ப்பு பிரகாசமாக இருந்திருக்கும். ஏனென்றால் அவரது பண்டாரநாயக்கா பரம்பரையின் வாக்குச் செல்வாக்கு. அல்லது அவரது தம்பி அனுராவையாவது நிற்க வைத்திருக்கலாம். போதாக் குறைக்கு ஜே.வி.பியையும் துரத்தி - பகைத்து விட்டார். மகிந்தராஜபக்ஷ அவ்வளவு செல்வாக்கானவரோ, சிறுபான்மையினரின் ஆதரவைப்பெற்றவரோ இல்லை. ஜே.வி.பி. வேட்பாளர் விமல் வீரவன்ஸ பகல்கனவு காண்கிறார். ஆக ரணில் ஐயாதான் வெல்லுவார். சந்தேகமில்லை.

5). இன்றுள்ள சூழ்நிலையைப் பார்த்தால் ஸ்ரீ.சு.க. மூலம் மகிந்தராஜபக்ஷ வர வாய்ப்புக்களே அதிகம். ஏன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியென்றால் தற்போதைய நெருக்கடி நிலையும், இனவாத சக்திகளின் சமாதான விரோதப்போக்கும் சிங்கள மக்களைத் திசைதிருப்பிவிடக் கூடும். ஜே.வி. பி யும் இறுதி நேரத்தில் தனது முடிவை மாற்றி சந்திரிக்காவை ஆதரிக்கக் கூடும். அவர்களுக்கு ரணில் வேப்பங்காய் என்பது தெரிந்ததே! சிறுபான்மையினரில் முஸ்லீம் கட்சிகளும் ஒரு சில மலையகத் தமிழ் கட்சிகளும் சு.க.வை ஆதரிக்கக்கூடும் எனவே - மகிந்தராஜபக்ஷவும் வெல்ல வாய்ப்பு உண்டு.

பளை ம. கனகசபை.

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தல் குறித்து இருபது பேரிடம் கேட்ட கருத்துக்களில் - ஐ.தே.க. ரணில் அவர்களுக்கு ஆதரவாகப் பதின்மூன்று பேரும், ஸ்ரீ.சு.க. மகிந்தாவிற்கு நால்வரும் கூறினர். யார் வந்தால் என்ன நம்மை நிம்மதியாய் வாழ விட்டால் போதும் என்று கருத்துக்கூற மூன்று பேர் மறுத்துவிட்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக சட்ட சபைத் தேர்தல்.

**தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் தி.மு.க கூட்டணியா... அ.தி.கவா வெற்றி பெறும்?**
**நம்மவர்கள் என்ன கூறுகிறார்கள் ...? யாழ் மக்கள் சிலரிடம் இது குறித்துக் கேட்டோம்.**

தமிழகத்தில் அடுத்த முதலமைச்சராக யார் வருவார்கள் என்று நினைக்கிறீர்கள்?

1. நிச்சயமாக கலைஞர் கருணாநிதிதான் முதல்வராக வருவார் காரணம் - கடந்த ஆறு வருட அ.தி.மு.க ஜெயலலிதாவின் ஆட்சிக்காலத்தில் வைகோவை கைதுசெய்தமை, தமிழ் இன உணர்வாளர்களிடமும், ஜெயேந்திர சுவாமிகள் கைது செய்யப்பட்டமை இந்துக்களிடமும் பெரும் வெறுப்பையும் கோபத்தையும் ஜெயலலிதாவிற்கு சம்பாதித்துக் கொடுத்துள்ளன. எனவே இம்முறை ஆட்சி மாற்றம் ஏற்படும். தி.மு.க. கூட்டணி வென்று கருணாநிதி அவர்கள் முதல்வராவார்.



சி. தங்கராசா

கொக்குவில்

2. கருணாநிதிதான் அவரது தலைமையிலான தி.மு.க கூட்டணி சுமார் ஏழு பிரதான கட்சிகளைக் கொண்டிருக்கிறது. இன்னும் பல சிறு கட்சிகளும் சேரக்கூடும் மறுபுறம் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க பக்கம் அவரது பங்காளியாக இருந்த பா.ஜ..க கூட தற்போது இல்லை. இனி இணையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புமில்லை. ஆகவே அ.தி.மு.க. ஆட்சியிலிருந்து தமிழகம் விடுபடும். கூட்டணிப் பலத்தோடு உள்ள தி.மு.க வெற்றிபெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

பி. செல்வமணி
ஆனைக்கோட்டை

. ஜெயலலிதாதான் மீண்டும் முதல்வராவார் போல் தெரிகிறது. ஏனென்றால் அண்மையில் நடைபெற்ற காஞ்சிபுரம், கும்பிடிப்பூண்டி சட்டசபை தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களில் பெரும் வாக்கு வித்தியாசத்தில் வென்றிருக்கிறாரே!

த. ராஜன்.
பளை



4. ஒருபுறம் கலைஞரின் கூட்டணிப்பலமும், மறுபுறம் ஜெயலலிதாவின் பணபலமும், ஆட்சிப்பலமும் மோதுகின்றன. எனவே குறிப்பாக எதையும் கூறமுடியாது. தமிழக வாக்காளர்கள் பணவிடயத்திலும், சலுகை விடயத்திலும் தடுமாறக் கூடியவர்கள் காரணம் அவர்களது வறுமைநிலை. எனவே அதை தவறு என்று கூறவும் முடியாது. மறு புறம் எம்.ஜி.ஆர். அவர்களின் வாக்கு வாங்கி இன்னும் நல்ல நிலையிலேயே உள்ளது. என்றாலும் கலைஞர், வைகோ, டொக்டர் ராமதாஸ் போன்றோரும் சும்மா இல்லை.

ம்......... பார்ப்போம்!

கு. அருமைநாயகம்.
நுணாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. என்னைப் பொறுத்தவரை ஜெயலலிதாவின் அரசு பல நல்ல காரியங்களைச் செய்திருப்பதை தமிழக தொலைக் காட்சிகள் மூலமும், வார மாத இதழ்கள் மூலமும் அறிய முடிகிறது. இதைவிட அவரது பலம் துணிச்சலான செயல்கள். சரியோ தவறோ நினைத்ததை உடனே முடித்து விடுவார். இருந்தாலும், டான்ஸி ஊழல் வழக்கு மற்றும் சங்கராச்சாரியார் விவகாரம், என்பன அவருக்கு வைக்கப்பட்டிருக்கும் செக். தப்புவாரா இல்லையா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

யோ. இராசதுரை,

நெல்லியடி

6. கருணாநிதியும் சரி, ஜெயலலிதாவும் சரி மாறிமாறி முதல்வரானவர்கள். ஊழல் விவகாரங்களிலும் சிக்கியவர்கள். எனவே இவர்களுக்கு மாற்றாகவும் தமிழக மக்கள் வேறு ஒருவரை விரும்பக்கூடும். அது வைக்கோவாக இருக்க இப் போது வாய்ப்பில்லை. அவர் தி.மு.க கூட்டணியில் சிக்கியுள்ளார். ஆனால் இன்னும் கட்சியே ஆரம்பிக்காத விஜயகாந் மீது மக்கள் சாயத் தொடங்கியுள்ளனர் போல உள்ளது. அவருக்கும் முதல்வர் கனவு உண்டு. ஆனால் அவரது வேகம் போதாது இன்னும் சுறுசுறுப்பாக இயங்கினால் அவருக்கும் வாய்ப்பு உள்ளது.

எம்.ரங்கநாதன்,

சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது குறித்து இருபது பேரிடம் கருத்துக் கேட்டேன் அவர்களில் 9 பேர் கலைஞர் கருணாநிதி என்றும், ஆறுபேர் செல்வி ஜெயலலிதா என்றும், இருவர் கப்டன் விஜயகாந் என்றும், கூறினர். மூவர் சரியாக கூறமுடியாது என்றனர். ஆமாம்... நீங்கள் சொல்லுங்கள் யார் முதலமைச்சராக வருவார் ?

இந்த இருபது பேரில் பதினெட்டுப் பேர் செல்வி ஜெயலலிதாவின் ஈழத்தமிழர். விரோதப் போக்குக்குறித்து கடும் கோபத்தையும் தெரிவித்தனர். கலைஞர் கருணாநிதியின் "மதில்மேல் பூனை" நிலையில் உள்ள ஈழத்தமிழர் மீதான பார்வை பற்றியும் இருபது பேரும் கண்டனம் தெரிவித்தனர்.

மற்றும் வைகோ பற்றிக் கேட்டதற்கு இருபது பேரும் வைகோமீது பெரும் மதிப்பும், அன்பும் கொண்டிருப்பதும், அவரது ம.தி.மு.க. தனித்து நின்று வைகோ முதல்வராக வேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்தனர்.

விஜயகாந் குறித்துக் கேட்டதற்கு அவரது ஈழத்தமிழர் மீதான அக்கறை மகிழ்ச்சிதருவதாகவும் அவர் தமிழக அரசியலில் பெரும் இடதனைப் பெற வேண்டும் என்றும் கூறினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் தமிழகத்தில் தமிழின் நிலை பற்றிக்கூறும் போது திரைப்படங்களிலும், பத்திரிகை, சஞ்சிகைகளிலும், ஏன் பேச்சு வழக்கிலுமே தமிழ், சிதைக்கப்பட்டு வருவது குறித்துக் கவலை தெரிவித்தனர். கூடவே தமிழ்ப்பாதுகாப்பு இயக்கத்தின் நடவடிக்கைகள் மகிழ்ச்சி தருவதாகவும் கூறினர்.

வாசக அன்பர்களே.!

இந்த இதழ் தொடர்பான உங்கள் கருத்துக்கள் எவையானாலும், கண்டனங்களானாலும், திருத்ங்களானாலும், எழுதி அனுப்புங்கள். அவை அடுத்த இதழ்களில் பிரசுரமாவதுடன், எமக்கு மிகவும் உந்து சக்தியாகவும் அமையும் தவறுகளைத் திருத்தவும் வாய்பளிக்கும். கடிதம், தொலைபேசி,SMS மூலமும், நேரடியாகவும் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. அத்துடன் நாட்டு நடப்புக்கள், வெளிநாட்டு விவாதங்கள் குறித்தும் எமக்கு எழுதுங்கள்.



அனுப்பவேண்டிய முகவரி,
தமிழ் ஓசை,
மீசாலை மேற்கு,
மீசாலை.

தம்பியண்ணா
Cell - SMS
077 – 9127527



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலண்டன் குண்டுத் தாக்குதல்

**சமீபத்தில் இலண்டன் நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளில் பலர் பலியாகினர். இது பற்றி யாழ் மக்கள் என்ன கூறுகிறார்கள் ...? இதோ ..!**

1. இலண்டனில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல்கள் மிகவும் கண்டிக்கத்தக்கது. பல நாட்டவர்களும் அமைதியாக மகிழ்ச்சியாக வாழும் ஒரு நாட்டில் இப்படியான கொடூரத் தாக்குதல்கள் மிகவும் கவலைக்கும், கண்டனத்திற்கும் உரியவை. அதுவும் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டு உறவுகளைப் பிரிந்து ஏதோ உழைத்து உறவுகளுக்கும் கொடுத்து நாட்டிற்கும் கொடுத்து தம்மை உருக்கும் ஈழத்தமிழர்கள் அங்கும் இனி நிம்மதியாக இருக்க முடியாதோ என்று எண்ணும் போது மிகவும் துன்பமாக இருக்கிறது.

கு. மரியதாஸ்
நெல்லியடி.

2. இலண்டன் மக்கள் மிகவும் பரந்த மனம் கொண்டவர்கள். போரினால் பாதிக்கப்பட்ட நம் தமிழ் உறவுகளாகட்டும், பிற இஸ்லாமிய நாட்டு மக்கள் ஆகட்டும் அனைவரையும் வரவேற்று இடம் தந்து நிம்மதியாக வாழ வழி கொடுத்துள்ள அவர்களுக்கு இப்படியான ஒரு சோதனை –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனை ஏற்பட்டிருக்கக்கூடாது. இத் தாக்குதலில் நமது உறவுகளும் பாதிக்கப்பட்டிருப்பதும் - அங்கு உரிய அனுமதி இன்றி உள்ள ஈழத்தமிழர்களுக்கும் ஆபத்தான விடயம். ஆக மொத்தத்தில் மிகவும் கண்டனத்திற்குரிய சம்பவமே!.

செ. அருமை
வரணி.

3. பிரிட்டனில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் துரதிஷ்டவசமானதே, கண்டனத்திற்குரியதே! அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்த இலண்டன் மாநகரில், பலதேசத்தவர்களும் ஒன்றாக மகிழ்ச்சியாக வாழும் பகுதியில் இப்படியான துன்பகரமான சம்பவங்கள் இனிமேல் நடைபெறக்கூடாது. ஆனால் இதற்கு ஒசாமாபின்லேடனையோ,அல்கைதா இயக்கத்தையோ சாடுவதைவிடுத்து ஜோர்ஜ்புஷ்சையே தண்டிக்க வேண்டும். அவர்தான் ஈராக்கில் வம்புக்குப் போர் தொடுத்தார். அதற்கு துணையாக பிரிட்டனையும் இழுத்தார். அதன் பலனே இச்சம்பவம் ரொனிபிளேயர் அப்பாவி. புஷ் செய்தபாவத்திற்கு துணை போனதால் வந்தவினை இது.

து. தளையசிங்கம்,
கரணவாய்.

4. “வினை விதைத்தவன் வினை அறுவடைசெய்தே” ஆக வேண்டும். அப்பாவி ஈராக் மக்கள் தினமும் நூற்றுக் கணக்கில் கொல்லப்படுவதற்கு காரணமானவர்கள் புஷ்ஷும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிளேயரும்தான். அது குறித்து அவர்களுக்குக் கவலையில்லை. தமது தேசங்களில் சிறு சம்பவத்திற்கு- வெறும் ஐம்பது அறுபது உயிர்கள் பலியானதற்கு தாம்,தூம் என்று குதிப்பது வேடிக்கையே. உயிர்ப்பலி என்பது ஏற்கமுடியாது. கண்டனத்திற்குரியதுதான். ஆனால் இதற்கு அமெரிக்காவும் பிரிட்டனுமே பதில் சொல்ல வேண்டும்.

எஸ். நவமணி,

மாதகல்.

5. பிரிட்டனில் நடைபெற்ற இத்தாக்குதல் சம்பவம் மிகவும் துன்பகரமானதும், கண்டனத்திற்குமுரியது. இங்கிலாந்து மக்கள் இத்தகைய குண்டு வெடிப்புக்களை அனுபவி-த்திருக்காதவர்கள். இலண்டன் நகரின் அமைதியும், அழகும், மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறதை T.V இல் காணமுடிந்தது. யார் செய்திருந்தாலும் - எத்தகைய நோக்கமானாலும் இதுவே இறுதிச் சம்பவமாக இருக்க வேண்டும். இது உலகளாவிய ரீதியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

க. குணசிங்கம்.

அரியாலை.

6. நிச்சயமாக கவலைக்குரிய சம்பவம். இதில் ஈழத் தமிழர்களும் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். இத்தாக்குதலை நடத்தியவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்குவைதா அமைப்பினர் என்று கூறப்படுகின்றது. இது முழு இஸ்லாமியர்களுக்கும் பெரும் பழியை ஏற்படுத்தவும், மதத்தின் பெயரால் நடைபெறும் வன் முறைகள் பரவவும் வழிவகுத்துள்ளது. ஆனால் இலண்டன் முஸ்லிம்கள் மீதான தாக்குதலும் காட்டுமிராண்டித்தனமானதே.

ம.யேசுராசா.

கைதடி.


## நியூ றோயல் ஐஸ் இன்டஸ்றீஸ்

**உங்கள் இல்லங்களின் மகிழ்ச்சிகரமான நேரங்களில் குளிர்பானம் தயாரித்திட தரமான ஐஸ் கட்டிகளுக்கு எம்மை நாடுங்கள்.**

குளிர்பான நிலையங்கள், நடமாடும் குளிர்களி விற்பனையாளர்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

**New Royal Ice Industries**

T.P. 021 – 222 5782

**வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக,**

**யாழ்ப்பாணம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராக் குண்டு வெடிப்பு.

**இராக்கில் சதாம் வீழ்ச்சிக்குப் பின் நடைபெற்று வரும் குண்டுத்தாக்குதல்கள் குறித்து யாழ் மக்கள் கருத்து.**

1. மிகவும் பரிதாபமான நிலைக்கு இன்றைய இராக் தள்ளப் பட்டுள்ளது. பழம் பெருமை வாய்ந்த எண்ணெய்த் தேசம் இராக். பல வரலாற்றுச் சிறப்பு மிக்க இஸ்லாமிய தேசம். சதாம் எப்படிப்பட்டவராயினும் அவரது ஆட்சிக்காலத்தில் மக்கள் இவ்வளவு துன்பப்பட்டிருக்க மாட்டார்கள். கடவுளே.. நாளாந்தம் குண்டு வெடிப்புக்கள் பல நூற்றுக்கணக்கான உயிர்ப்பலிகள் இது எங்க போய் முடியுமோ.....?

R. தெய்வேந்திரம்,

கோயிற்குடியிருப்பு

2. இராக் மக்களின் - அடக்கு முறைக்கு எதிரான செயற்பாடுகளே வன்முறையாக மாறிவிட்டது. அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாட்டுப் படைகள் வெளியேறும் வரை இத்தகைய வன்முறைகள் தொடரத்தான் போகுது போலுள்ளது. எனவே இராக் மக்களிடம் ஆட்சியை கொடுத்துவிட்டு அமெரிக்கா வெளியேறுவதே மிகவும் நல்லது.

சி. தம்பிராசா,

இணுவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இராக் மீது போர்தொடுக்க அமெரிக்கா சொன்ன சாட்டு பேரழிவு இரசாயன ஆயுதங்களை இராக்கில் அதிபர் சதாம் தயாரித்து வைத்துள்ளார் என்பதாகும். இதைச் சொல்ல அமெரிக்காவுக்கு எத்தகைய தகுதியும் கிடையாது. அதைவிட அக்குற்றச் சாட்டும் பொய் என்பது முன்னரும் தெரிந்து பின்னரும் உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. ஆக தனது நீண்ட நாள் எதிரியை (சதாம்) வீழ்த்தியதும், மயக்க வைத்துப் பிடித்ததும் தான் அமெரிக்காவின் சாதனை ஆனால் இராக் மக்களுக்குத் தினமும் வேதனை.

அ. குகதாசன்,

கல்வியங்காடு.

4. இராக் மீதான போரும் சரி, தற்போதைய குண்டுத் தாக்குதல்களும் சரி அமெரிக்காவிற்கு எதுவித பாதிப்பும் இல்லை. சதாமைப் பிடித்தவுடனாவது வெளியேறியிருக்க லாம். ஆனால் இராக் மக்களுக்கும் முன்னாள் அதிபர் சதாமுக்கும் இன்னும் பழி தீர்க்கவே அமெரிக்கப் படைகள் அங்கு நிலைகொண்டுள்ளனர். அத்துடன் இராக்கின் எண்ணெய் வளமும் அமெரிக்காவின் ஆதிக்கத்திலிருந்து விடுபடப் போவதில்லைப் போல்தான் தெரிகிறது.

தி . குருபரன்.

கோப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இராக் மீதும், அதன் அதிபர் சதாம் ஹீசைன் மீதும், மக்கள் மீதும் உள்ள வெறுப்பையே அமெரிக்காவும், அதன் படைகளும் இப்போதும், முதலும் நிருபித்து வருகின்றன. சதாமை உள்ளாடையுடன் படம் பிடித்து ரசித்ததும், இராக் படையினர் - சதாம் ஆதரவாளர்களை கைது செய்து சிறையில் இட்டு சித்திரவதை செய்வதும், பாலியல் கொடுமைகளும் மற்றும் இப்போது நடைபெறும் குண்டு வெடிப்புக்களைக் கண்டும் காணாதிருப்பதும் உணர்த்துவது அதனையே!

மோ. வைத்திலிங்கம்.

சுண்டிக்குளி.

6. நாகரிகத்தின் உச்சத்தில் இருப்பதாகக் கூறப்படுகிற அமெரிக்காவின் கேவலமான பல செயல்களை இராக்கில் காணவும்,கேட்கவும் முடிந்தது உயர் தொழில் நுட்பகருவிகள் பல வைத்திருக்கும் அமெரிக்காவால் துல்லியமாக பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்க முடியாமல் போனதும், தனது படைகளின் காட்டுமிராண்டித்தனமான போக்கை தடுக்க முடியாமல் போனதும், இப்போதைய குண்டுத்தாக்குதல்களைத் தடுக்க முடியாமல் போனதும் ஒரு சாதாரண நாட்டை ஒத்ததாகவே அமெரிக்காவையும் கருத வேண்டியுள்ளது.

சி. பசுபதி.

நீர்வேலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் ஈழ ஆதரவு, மற்றும் தமிழ் எழுச்சி !

இந்தியாவில் தமிழ் நாட்டில் மீண்டும் ஈழத்தமிழர் மீதான ஆதரவுப் போக்கும், தமிழ் எழுச்சியும் பரவலாக பெருகி வருகின்றது. இதை இந்தியா சென்று வந்தபோது அவதானிக்க முடிந்தது. அத்துடன் அங்குள்ள தமிழ் உறவுகளுடன் இது குறித்து உரையாடிய போது கிடைத்த தகவல்களை நீங்களும் படியுங்கள்!.

1. இங்குள்ளவங்க ஆட்சியைப் பிடிக்கறதுக்குதான் சண்டைபோடுறாங்களே தவிர தமிழ், தமிழன் குறித்து கொஞ்ச காலம் கவனிக்காமலே வுட்டுட்டாங்க. 90 க்கு முன்னாடி பாத்திங்கன்னா, ஈழத்தில நடந்த அத்தனை தமிழருக்கெதிரான வன்செயல்களுக்கும் இங்க பெரும் எதிர்ப்பு இருந்தது. இப்பல்லாம் யாரும் கண்டுக்கறதில்ல. வைகோ மட்டும் தான் உறுதியா இருக்காரு. முன்னாடி எம் ஜி.ஆர் எவ்ளோ ஹெல்ப் பண்ணினாரு ம்.. அதெல்லாம் நெனச்சா.... – ஆனா கண்டிப்பா ஈழத்தமிழர்களுக்கு சீக்கிரமே விடிவு வரும். அப்போ இவங்கள்ளாம் தல குனிஞ்சு நிக்கப் போறாங்க பாருங்க.



டி.ஆர் கோவிந்தன்

பெரம்பூர் சென்னை 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. இப்ப பாத்திங்கன்னா டாக்டர் ராமதாசு நடத்துற தமிழ் மொழிப் போர்ங்கிறதுக்கு இந்தம்மா (ஜெயலலிதா) ரொம்ப பயம்காட்டறாங்க. தமிழ் திரைப்படப் பெயர் வைக்கிறது, பெயர்ப்பலகைல தமிழ் அவசியம்ன்னுட்டு தார்பூசற போராட்டம் இதுக்கெல்லாம் தடைபண்ற மாதிரி போலிச ஏவிட்டு அடாவடி பண்றாங்க. இவங்க என்ன தமிழ்நாட்டு முதலமைச்சரா, வெள்ளக்காரங்க நாட்டு முதலமைச்சரா, கலைஞர் கூட முன்னாடி ஆட்சில இருந்தப்ப சரியாக்கண்டுக்கல. ஆனா ராமதாசு, திருமாவளவன்லாம் இப்ப தமிழ் பாதுகாப்புல இறங்கியிருக்காங்க. ரொம்ப நல்ல விஷயம்.



பழனி. மாணிக்கம்,

அரும்பாக்கம், சென்னை- 106

3. எம். ஜி. ஆர் காலத்துக்குப் பின்னாடி இலங்கைத் தமிழர்கள் மீது இங்க அக்கறை குறைஞ்சிருக்கு. வைகோ திருமாவளவன், டாக்கடர் ராமதாஸ், பழ. நெடுமாறன் போன்றவங்கள்ளாம் இப்பவும் ஆதரவுக் குரல் கொடுத்திட்டு வர்றாங்க. ஆனா அவங்ககிட்ட ஆட்சி இல்லையே..? கலைஞர் நல்லது பண்ணலண்ணாலும் கெடுதல் பண்ணல்ல. ஆனா இந்தம்மா என்ன பண்ணுது.. தனக்கு ஆபத்து, தற்கொலைப் படைவருதுன்னு பூச்சாண்டி காட்டறதும், இங்க உள்ள ஈழத் தமிழன கூட சுதந்திரமா விடாம தொல்ல கொடுத்திட்டு இருக்காங்க. ம்.. என்னமோ இனி ஈழத்தமிழன கடவுள்தான் காப்பாத்தணும்.

வெங்கடேஸ் ராஜ்

ராமநகர் சென்னை -82



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. இந்தியாவுக்கும், இலங்கைக்கும் உள்ள பழங்காலத் தொடர்பு எப்படியோ அதைவிட ரொம்ப பழமையானது தமிழ் நாட்டுக்கும் ஈழத்தமிழனுக்குமான உறவு. தொப்புழ் கொடி உறவுன்னு சும்மாவா சொல்றாங்க. ஆனா நம்ம கெட்ட காலம் அங்க தமிழன் செத்துட்டிருக்கான். இங்க அதக் கண்டுக்காம துணிய அவுத்துப் போட்ட வடநாட்டுக் காரிங்ககூட தமிழன் கூத்தாடிக்கிட்டு இருக்கான். தமிழ் பண்பாடு, கலாசாரம் எல்லாம் ரொம்ப கெட்டுப்போச்சு. தமிழ்ப்பற்று ரொம்ப குறைஞ்சிருச்சு.... என்னபண்றது?

தி -ஆதிசங்கர்

கிழ்பாக்கார்டன் - சென்னை -10



5. தமிழ், தமிழன்னு மூச்சுக்கு மூச்சு பேசறவங்களே (தி.மு கவும் கருணநிதியும்) "சன்டீவி சன்நியூஸ், கே.டீ.வி, சன்மியூஸிக்"ன்னுட்டு தமிழ் தொலைக்காட்சி அலைவரிசைகளுக்கு பெயர் வைச்சிருக் காங்க. அதக் கண்டுக்காம தமிழ் பாதுகாப்பு இயக்கம் மத்தவங்கள எதிர்க்கிறாங்க. அதவிட இங்க பேசற சாதாரண தமிழே உங்க நாட்டு யாழ்ப்பாணத் தமிழ் போல வராது போதாதுன்னு ஆங்கிலம் இந்தி, சமஸ்கிருதம்ன்னு பல மொழிக்கலப்பும் சேர்ந்து தமிழ சிதைச்சிட்டு வருது யாழ்ப்பாணத்துல என்ன அழகா தமிழ் பேசறாங்க.. இங்க கூட யாழ்ப்பாணத்து வானொலி அறிவிப்பாளர் ஒருத்தர் இருக்காரு. ( யாழ்- சுதாகர் - சென்னை, சூரியன் எப்.எம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் வாழனுமின்னா தமிழன் வாழனும். அதுவும் யாழ்ப்பாண - ஈழத்தமிழன் வாழணும். ஆனா எங்கவிடறாங்க......! ஆனா கண்டிப்பா தர்மம் வெல்லும் பாருங்க. ஈழத்தமிழரின் பக்கம் நீதியும், தர்மமும் இருக்கு. கண்டிப்பா வெற்றி கிடைக்கும். அதுக்குப் பிறகாவது இங்க உள்ளவங்க கண்டுக்கறாங்களான்னு பார்ப்போம். அதுவரைக்கும் வைகோபோல இங்க பல தலைவர்களும் நம்மளமாதிரி சாதாரண மக்களும் குரல்கொடுத்திட்டே இருப்போம். தைரியமா இருங்க.

இரா- குப்புசாமி

கொளத்தூர் சென்னை -99

6. சிலோன் தமிழர்கள் ரொம்ப கஸ்டப்படறாங்க பாக்கறதுக்கு வேதனையா இருக்கு. 30 வருசமா போர் நடந்துச்சு. அதுலே எவ்வளவு அழிவு அது போதாதுன்னுட்டு இப்போ சுனாமியும் பாதிச்சிட்டு. இப்பகூட நிலைமை நல்லா இல்லியே..... சீக்கிரமே உங்களுக்கு நல்லகாலம் பொறக்கணும்.

ஜே. விக்டர்

பல்லாவரம் சென்னை -43

இது விடயமாக பலருடன் உரையாடியிருந்தேன். பெரும்பான்மையானோர் தமிழீழத்தை ஆதரிக்கின்றார்கள். ஒரு சிலர் இலங்கை பிரிந்தால் இந்திய ஒருமைப்பாட்டிற்கு ஆபத்து என்றும் ஒரே நாட்டிற்குள் தீர்வு என்றும் சிலர் அதை மறுத்து தமிழ் தனிநாடு உருவானாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிற்கு எதுவித பாதிப்பும் இல்லையென்றும் ஆனாலும் பிரிந்து செல்லாமல் ஒருங்கி ணைந்து இருப்பதே நல்லது என்றும் கூறினர். ஆயினும் எழுவது சதவிதமானோர் தனித் தமிழீழமே ஒரே தீர்வு என்பதை ஆணித்தரமாகத் தெரிவித்தனர். அது விரைவில் மலரும் என்றும் உறுதிபடக் கூறினர். இது குறித்து மேலும் பல தகவல்களை அடுத்த இதழ்களில் பார்ப்போம்.


## ஷோ

## போட்டோஸ்.

இந்தியா - தமிழ் நாட்டின் அருள் பொழியும் திருத்தலங்களின் புகைப்படங்கள், சுற்றுலாத் தலங்களின் அழகு மிளிரும் புகைப்படங்கள் மற்றும் அரிய பல விலங்குகள், பறவைகளின் படங்கள் எம்மிடம் கிடைக்கும்.

அழையுங்கள் 071- 9127527

உரிமையாளர்

ஷா











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசகர்களே!**

குறிப்பிட்ட காலத்திற்கு தமிழோசை கால வரையறைக்குட்பட்டு வெளிவராமல் வசதியான பொழுது வெளிவரும் என்பதை அறியத் தருகின்றோம். இந்த இதழில் மக்கள் கருத்துக்கள் மட்டுமே பிரசுரமாகியுள்ளன. இனிவரும் இதழ்களில் உங்கள் படைப்புக்களுடன் பல்சுவை சம்பவங்கள் பலவும் வெளிவரும்.

**வாசகர்களுக்கான போட்டி,**

இந்த இதழில் வெளியாகியுள்ள கருத்துக்கள் தொடர்பாக உங்கள் அபிப்பிராயங்களை எழுதி அனுப்புங்கள். முதலில் வரும் பத்துக் கடிதங்களுக்கு ரூபா 50 பெறுமதியான இந்திய திருத்தலங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களின் அழகிய புகைப்படம் ஒன்று அனுப்பி வைக்கப்படும்.

பரிசில்களை வழங்குவோர்

ஷோ (Sho)

**போட்டோஸ் நிறுவனத்தினர்**

அனுப்ப வேண்டிய முகவரி,

தமிழ் ஓசை,

மீசாலை மேற்கு,

மீசாலை.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கியோனின் முன்னைய படைப்புக்கள்.

**1. உன் கையில் உலகம்**

கவிதைத் தொகுப்பு – 2002

**2. இடப் பெயர்வுகள் இனி வேண்டாம்**

ஓர் அவலத்தின் அனுபவப் பகிர்வு – 2002

**3. தென்மராட்சியைக் காணோம்**

**- தேடுகிறார் தம்பியண்ணா**

**போர் + இடப்பெயர்வுகளின் பின்னரான மனத் தாக்கங்களின் வெளிப்பாடு.**

***வாசகர்களே !***

உங்கள் தமிழ் ஓசையின் இனிவரும் இதழ்களில் பக்தி, கல்வி, விளையாட்டு,மருத்துவம், நகைச்சுவை, மகளிர், சிறுவர், பொது அறிவு, விவாதம், ஆகிய பல அம்சங்கள் வெளிவர உள்ளன.

கேள்வி பதில் பகுதியும்இடம்பெறும். அவை எங்கள் கேள்வி பதில், உங்கள் கேள்வி பதில் , எங்கள் கேள்வி உங்கள் பதில்கள், உங்கள் கேள்வி எங்கள் பதில்கள், உங்கள் கேள்வி விருந்தினர்கள் பதில்கள் ஆகிய பிரிவுகளில் வெளிவரும். உங்கள் கேள்விகளை தமிழ் ஓசைக்கு எழுதுங்கள்.

நன்றி.

தமிழ் ஓசை மக்களின் மனதறிந்த பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org